# “சிங்கப்பூர் வழியாக இந்தியாவில் முதலீடு”

## பொருளியல் வாய்ப்புகளும், செயல்திறனும் முதலீட்டாளர்களுக்கு ஊற்சாகமளிக்கிறது என்கிறார் சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர்

**வீ. பழனிச்சாமி**

“இந்தியா ஒளிர்கிறது” எனும் தலைப்பில் இந்திய அரசாங்கம் நடத்திய விளம்பர இயக்கம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். இந்தியாவின் பொருளியல் வளர்ச்சி பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். அப்படி இருக்கையில் ஏன் அங்கு நேரடியாக சென்று பார்க்கக்கூடாது எனும் எண்ணத்தில்தான் இந்தப் பயணத்துக்கு ஏற்பாடு செய்தோம்” என்று கூறினார் சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர் திரு ஃபிரங்க்லின் லவின்.

சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையின் பேராளர் குழுவுக்குத் தலைமையேற்று கடந்த மாதம் 11ம் தேதியிலிருந்து 18ம் தேதி வரை இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர் நேற்று தமிழ் முரசுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் மேற்கண்டவாறு கூறினார்.

இங்குள்ள பன்னாட்டு நிறுவனங்கள் பலவற்றுக்கு வர்த்தக மையமாக விளங்கும் சிங்கப்பூர் வழியாக, பொருளியலில் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்குச் செல்வது பற்றி தமது தூதரகமும், சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையும் பல காலமாக யோசித்து வந்திருக்கிறது என்று திரு லவின் குறிப்பிட்டார்.

தற்போது சிங்கப்பூரில் 1,500 அமெரிக்க நிறுவனங்கள் செயல்படுகின்றன என்றும் அவற்றுள் 90 விழுக்காட்டு நிறுவனங்களுக்கு சிங்கப்பூருக்கு வெளியே வர்த்தக பொறுப்புகள் இருக்கின்றன என்றும் தெரிவித்த அமெரிக்கத் தூதர், சில குழுமங்கள் ஆசியானிலும், சில குழுமங்கள் ஆஸ்திரேலியாவிலும், சில குழுமங்கள் சீனாவிலும், சில குழுமங்கள் இந்தியாவிலும் தங்கள் வர்த்தக செயல்பாடுகளை நடத்தி வருகின்றன என்று கூறினார்.

அவற்றுள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நிறுவனங்கள் இந்தியாவுடன் வர்த்தகம் புரிந்து வருவதாலும், தற்போது பொருளியல் அரங்கில் இந்தியா அடிக்கடி பேசப்பட்டு வருதாலும் நாங்கள் இந்தியா பக்கம் எங்கள் கவனத்தைச் சற்று திருப்பினோம் என்றார்.

இந்தியா பல வர்த்தக பரிவர்த்தனைகளை அமெரிக்காவுடன் செய்திருக்கிறது. அதனுடன், சிங்கப்பூர் இந்த வட்டாரத்தின் வர்த்தகத் தளமாக விளங்குவதையும், இங்கிருந்து அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவில் உள்ள தங்கள் வர்த்தக பொறுப்புகளைக் கவனிப்பது சுலபம் என்பதையும் கருத்தில் கொண்டு அமெரிக்க வர்த்தக சபையின் பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பங்களைக் கேட்டோம். அந்தப் பட்டியலில் அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவுக்குச் செல்வதையே விரும்புகின்றனர் என தெரிய வந்தது.

நாங்கள் இதற்கு முன் இந்தோனீசியாவுக்கும், சீனாவுக்கும் இது போன்ற வர்த்தகப் பயணங்களை நடத்தினோம். ஆனால், இந்தியப் பயணத்தில்தான் ஆக அதிகமான 20 பேராளர்கள் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்தனர் என்றும் தெரிவித்தார் அமெரிக்கத் தூதர்.

தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம், ஆய்வு மற்றும் மேம்பாடு, நிதித் துறை, பட்டுவாடா சேவைத் துறை போன்ற துறைகளுடன் மற்ற துறைகளைச் சேர்ந்த பேராளர்களும் குழுவில் இடம்பெற்றிருந்தனர் என்றும் அவற்றுள் சில உலகப் புகழ்பெற்ற நிறுவனங்கள் என்றும் கூறினார் சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையின் தலைமை இயக்குநர் திரு நிக்கலஸ் டு போசாஜ்.

பெங்களூர், மும்பை, புதுடில்லி என்று மூன்று நகரங்களுக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க நிறுவனங்கள் பேராளர் குழுவினர், இந்தியாவின் பொருளியல், அறிவியல் துறைகள் பற்றியும், கர்நாடக மாநில அரசாங்கத்தின் வர்த்தக வாய்ப்புகள், வளர்ச்சிக்கான பகுதிகள், இந்திய அரசியல், பொருளியல், வர்த்தக கண்ணோட்டங்கள், இந்தியாவின் ரிசர்வ் வங்கியின் நடைமுறைகள், இந்திய தொழில்துறை சம்மேளனத்தின் வர்த்தகத் திட்டங்கள், டாட்டா நிறுவனத்தின் செயல்பாடுகள், திட்டங்கள், ஒரு செய்தியாளரின் பார்வையில் இந்தியா பற்றிய விரிவான கண்ணோட்டம், பேங்க் ஆப் இந்தியாவின் செயல்பாட்டு விவரங்கள், இந்தியாவில் செயல்படும் அமெரிக்க நிறுவனங்கள் பற்றி விளக்கம், நிதி மையமான மும்பையில் நிதி தொடர்பான வர்த்தக வாய்ப்புகள், இந்தியாவுக்கான சிங்கப்பூர் தூதர் திரு சீ சக் மான் இந்தியாவில் சிங்கப்பூர் நிறுவனங்கள் பற்றி அளித்த உரை, இந்திய தொடர்புத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை பற்றி இந்திய அரசாங்க அதிகாரிகள் தந்த விளக்கம் என்று பற்பல பயனுள்ள நிகழ்ச்சிகளில் அமெரிக்க நிறுவனங்களின் பேராளர்கள் கலந்து கொண்டனர் என்றும் அதன் வழி அவர்கள் நல்ல அனுபவமும், வர்த்தக அறிவும் பெற்றதாக தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் திரு லவின் தெரிவித்தார்.

இடையிடையே, சில முன்னணி நிறுவனங்களுக்கும் சென்று வந்தது பேராளர் குழு. அவற்றுள் ஒன்று பெங்களூரில் உள்ள இன்ஃபோசிஸ் நிறுவனம். அந்நிறுவனத்தின் வர்த்தக திட்டங்கள், இந்தியாவிலும், அனைத்துலக அளவிலும் அது எவ்வாறு செயல்படுகின்றது என்றும் பேராளர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

இந்தியாவின் தாராளமய சந்தை, வர்த்தகம் புரிவதற்கு எளிதான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதால், இங்கிருக்கும் அமெரிக்க நிறுவனங்கள் அதைத் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வர்த்தக வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ளும் என்று தாங்கள் நம்புவதாக கூறி அமெரிக்கத் தூதரும், சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபை தலைவரும் தங்கள் பேட்டியை முடித்தனர் .




வீ. பழனிச்சாமி

சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபைக்குத் தலைமை தாங்கி அண்மையில் தாம் இந்தியாவுக்குச் சென்றபோது அங்கு வர்த்தக வாய்ப்புகள் குவிந்து கிடப்பதை தாம் உணர்ந்ததாக கூறினார் சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர் திரு ஃபிரங்க்லின் லவின் (வலது). அவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பவர் சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபையின் தலைமை இயக்குநர் திரு நிக்கலஸ் டி போசாஜ்.

> “பொருளியல் வளர்ச்சி, சந்தை தாராளமயம், இந்திய பொருளியலை அனைத்துலக மயமாக்குதல் ஆகியவற்றுக்கு இந்திய தலைவர்கள் வலுவான ஆதரவு தருவதைக் கண்டு நாங்கள் மிகவும் உற்சாகமடைந்தோம். அங்கு நடப்பதைக் கண்டு நாங்கள் மலைத்துப் போனோம். சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு முன் சீனா இருந்த காலத்தில் அங்கு சென்றது போல இருந்தது எங்கள் இந்தியப் பயணம். எனது கருத்து என்னவென்றால், இந்தியாவுக்கு இன்னும் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அங்குள்ள அற்புத வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள அமெரிக்க நிறுவனங்கள் தங்கள் செயல்பாட்டுத் திறனை அதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்க வேண்டும்.”
>
> **- சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர் திரு ஃபிரங்க்லின் லவின்**

> “சிங்கப்பூருக்கும் இந்தியாவுக்கும் இடையே இந்த ஆண்டு கையெழுத்தாகவிருக்கும் முழுமையான பொருளியல் ஒத்துழைப்பு உடன்பாடு பற்றியும் எங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. அந்த உடன்பாடு மூலம் அமெரிக்கா எந்த அளவுக்கு நன்மையடையும் என்றும் விளக்கப்பட்டது. அப்படி நன்மையடைய வழி இருக்குமானால், அது எந்த அளவுக்கு சிங்கப்பூரிலிருந்து செயல்படும் அமெரிக்க நிறுவனங்களுக்குச் சாதகமாக அமையும் என்றும் நாங்கள் சிந்திக்கவேண்டியிருக்கிறது.”
>
> **- சிங்கப்பூருக்கான அமெரிக்கத் தூதர் திரு ஃபிரங்க்லின் லவின்**



சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க வர்த்தக சபை

பெங்களூரில் உள்ள அமெரிக்க வர்த்தக சபை அளித்த விருந்துக் கூட்டத்தில் சிங்கப்பூரிலுள்ள அமெரிக்க நிறுவனங்களின் நிர்வாகிகளும், பிரதிநிதிகளும் இந்திய நிர்வாகக் கழகப் பேச்சாளரின் உரையைச் செவிமடுக்கின்றனர்.